# திருவேற்காடு நகராட்சி
# நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 29.01.2021**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

## பொருள் எண். 1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.1383** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண். 2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜனவரி 2021 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.1384** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சியில் ஜனவரி 2021ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.1385** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண்.4

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid-19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர், திருவள்ளூர், உதவி இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர்அவர்களின் அறிவுரைகளின்படியும் தினசரி கிருமி நாசினி தெளித்து கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, **Hand Sanitation** கிருமி நாசினி 600 லிட்டர் வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் கேட்டுகொண்டுள்ளபடி sanitation என்னும் கிருமி நாசினி தற்போது இருப்பு இல்லாததாலும் **Hand Sanitation 600** லிட்டர், சப்ளை செய்யும் பணிக்கு தற்போது மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திடவும், உள்ளூர் மற்றும் வெளியூர்

நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்திடவும், ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**<u>ந.க. எண். 961/2020/எச்1.</u>**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1386** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.5</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 18 வார்டுகளிலும் அரசு பள்ளிகள், ஆரம்ப பள்ளி, உயர்நிலை பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்து ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணியினை திருவேற்காடு நகராட்சியில் உள்ள **ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்** என்னும் தனியார் நிறுவனம் தொடர்ந்து பணி செய்து வருகிறது. 31.01.2021 அன்று முதல் இந்நிறுவனத்தின் ஆண்டு ஒப்பந்தக்கலாம் முடிவடைகிறது. எனவே, பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் உள்ளதால், பள்ளிகளின் தூய்மை, சுகாதாரம் குறித்தான விஷயம் என்பதாலும், மேற்படி பள்ளிகளின் கழிவறைகளை சுத்தம் செய்ய வேண்டியுள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு (பிப்ரவரி, மார்ச், மற்றும் ஏப்ரல்) தொடரவும் பணி நீட்டிப்பு செய்திடவும் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணிகள் மேற்கொள்ள மற்றும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1387** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.6</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள பொது சுகாதார வாகனங்கள் தொடர்ந்து துப்புரவு பணியில் ஈடுப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இப்பணியில் ஈடுப்படுத்தப்படும் வாகனங்களான டாடா ஏஸ் வாகனங்கள் TN-12 -1038, TN –12 AB 7437, TN– 12 V–7786, TN– 12 AF–1986 –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் புதிய டிராக்டர் வாகனத்தின் மேற்கூரை, Side Angle மாற்றிட கோரி, துப்புரவு பணி மேற்பார்வையாளர் மற்றும் ஓட்டுநர்களின் கோரிக்கை கடிதங்களை ஏற்று துப்புரவு ஆய்வாளர் தன் குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளதற்கிணங்கவும் பணியின் அவசர அவசியம் கருதி தற்போது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்து கொள்ளவும், ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணிகள் மேற்கொள்ள மற்றும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1388** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை கொண்டது, இந்நகராட்சியின் பரப்பளவு 28.56 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு வளர்ச்சி பெறும் நகராட்சியாகும். மேலும், நகராட்சி பகுதியில் டெங்கு நோய் தடுப்பு மற்றும் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்தவும், தேவையான கிருமி நாசினி **பிளிச்சிங் பவுடர் 10 மெட்ரிக் டன் மற்றும் பினாயில் 1000 லிட்டர்** கொள்முதல் செய்திட துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 01.10.2020 தேதிய குறிப்பினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, கிருமி நாசினி கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மற்றும் இதற்கான செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1389** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காகவும் மற்றும் பருவ கால மாறுபாட்டினால் திடீரென பெய்யும் கன மழையினால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி அந்நீரில் கொசுக்கள் இனபெருக்கம் செய்து டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் பொருட்டு தினசரி பயன்பாட்டிலுள்ள மெகா புகைப்போக்கி இயந்திரம் மூலம் கொசுப்புழு தடுப்பு மருந்து தெளிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி புகைப்போக்கி இயந்திரம் சரிசெய்யும் பொருட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரபெற்ற விலைபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | புகைபோக்கி இயந்திரம்–1 பழுதுநீக்கம் | தொகை |
|---|---|---|---|
| 1. | கார்த்திகா சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் T-191, கட்டபொம்மன் தெரு, பாரி நகர், சென்னை–83. | 1. Hand Pump<br>2. Air pump<br>3. Petrol tank cap<br>4. N.R.V<br>5. Diabram<br>6. Banjio<br>7. Carborator<br>8. Chemical Nozil<br>9. Panel Box<br>10. Spark Plug<br>11. Petrol Jet<br>12. TufflonTube<br>13. Ignition Coil<br>14. Service Charge | 5000<br>7000<br>50<br>600<br>500<br>5000<br>3000<br>2000<br>6000<br>150<br>4000<br>700<br>2000<br>2000 |
| | | 1. Petrol Jet | 4500 |

| | | | |
|---|---|---|---|
| 2. | நாடி எண்டர்பிரைசஸ் எண்.14/13, நியூ காலனி மெயின் ரோடு, மேற்க சைதாப்பேட்டை. | 2. Air Pump<br>3. N.R.V<br>4. Diabram<br>5. Banjio<br>6. Hand Pump<br>7. Carbonator<br>8. Chemical Nozil<br>9. Tufflon Box<br>10. Panel Box<br>11. Spark Plug<br>12. Petrol Tank Cap<br>13. Ignation Coil<br>14. Service Charges | 7500<br>600<br>500<br>5500<br>6000<br>3500<br>2500<br>700<br>6500<br>350<br>50<br>2500<br>3500 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான நிறுவனத்தின் கார்த்திகா சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1390 நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளை உள்ளடக்கியதாகும் , மேலும் இந்நகராட்சி சென்னை பெரு மாநகராட்சியை ஒட்டிய வளர்ச்சி பெரும் நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சியில் 22,291 குடியிருப்புகள் அமைந்துள்ளன. நகராட்சி பகுதிகளில் இரு வேலைகளிலும் கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வரப்படுகிறது. நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற **2 Mega Fogging Machine-கள், 1 pulse fogging Machine மற்றும் 10-Mini Fogging Machine–கள்** உள்ளது. இரவு நேரங்களில் வாகனத்துடன் கூடிய **Mega Fogging** இயந்திரம்– **II** உபயோகப் படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்குறிப்பிட்ட **Mega Fogging** இயந்திரத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி புகைப்போக்கி இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து விலைப் புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும், இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/– பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தில் பதிவு செய்யவும் மற்றும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1391 நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழில்கள் கணிணியில் பதிவு செய்யவும், கொரோனா மற்றும் டெங்கு நோய் தடுப்பு பணிகள் குறித்து அறிக்கைகள் தயார் செய்து கணிணியில் பதிவேற்றம் செய்யவும் மற்றும் நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் கணிணியில் பதிவேற்றம் செய்து மறுதாரர்களுக்கு தகவல் அளிக்கவும், மேலும், வருவாய் பிரிவில் பெயர் மாற்றம் மற்றும் புதிய வரி விதிப்பு விண்ணப்பங்களை கணிணியில் பதிவேற்றம் செய்தல், பொது பிரிவில் தபால்கள் மற்றும் தேர்தல் தொடர்பான வேலைகள் போன்ற பணிகளுக்கு போதிய தட்டச்சர்கள் மற்றும் புள்ளிவிவரக் குறிப்பாளர்கள் இல்லாததாலும், ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் தற்காலிகமாக 5 எண்ணிக்கையில் தட்டச்சர்கள் மற்றும் புள்ளிவிவரக்

குறிப்பாளர்களை தருவித்திடவும் மற்றும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | ரோஜா மகளிர் சுய உதவிகுழு, எண்.21, 2வது தெரு, சீனிவாசா நகர், கோலடி, திருவேற்காடு, சென்னை –77. | திருவேற்காடு நகராட்சியில் அலுவலகத்தில் போதிய தட்டச்சர்கள்மற்றும் புள்ளிவிவரக் குறிப்பாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் 5 பணியாளர்கள் தருவித்தல் – பணிக்கு. | 450/- | ரூ. 450/- |
| 2. | காமாட்சிபுரம் பகுதி அளவிளான மகளிர் குழு கூட்டமைப்பு , எண். 35, சுப்பிரமணியப்புரம், திருவேற்காடு சென்னை–77. | | 433/- | ரூ. 433/- |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய **காமாட்சிபுரம் பகுதி அளவிளான மகளிர் குழு கூட்டமைப்பு** ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மற்றும் 9 மாதங்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி அளிக்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1392** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் அதிமாக பரவி வருவதால் போதிய அளவு Mask and Cloves (Rubber Reusable) இருப்பு இல்லாததால் முககவசம் 5000 மற்றும் கையுறை 500 எண்ணிக்கையில் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | கொள்ளளவு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் Exportor and Distributors No. 9-5-1.பஜார் தெரு, முதல் மாடி, அய்யம்பாளையம், திண்டுக்கல். பின்கோடு –624204. | இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் அதிமாக பரவி வருவதால் போதிய அளவு Mask and Cloves (Rubber Reusable) இருப்பு இல்லாததால் முககவசம் 5000 மற்றும் கையுறை 500 எண்ணிக்கையில் சப்ளை செய்யும் பணிக்கு | 1 Nos Mask<br>1 Nos Cloves (Rubber Reusable) | ரூ.5.50<br>ரூ.220.00 |
| 2. | ஸ்ரீ தாய் மூகாம்பிகா எக்ஸ்போர்ட் எண்.4 பூங்கா நகர், சுலீஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி. | | 1 Nos Mask<br>1 Nos Cloves(Rubber Reusable) | ரூ.9.00<br>ரூ.250.00 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–
ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1393** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.12</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், இந்நகராட்சியில் அயனம்பாக்கம் மற்றும் நூம்பல் பகுதியில் மட்டும் சுமார் 400 சிறு மற்றும் குறு தொழிற்சாலைகள் உள்ளன. தொழிற்சாலைகளிலிருந்து சேகரமாகும் தொழிற்காலை கழிவுகள், இரசாயன கழிவுகள் மற்றும் திடக்கழிவுகள் (Scrabber) பெரிய தொழிற்சாலைகளில் மறுசுழற்சிக்கு பணிக்கு தேவைப்படுவதால் குப்பைகள் வெளியே வருவதில்லை. இவ்வகையான கழிவுகள் இரசாயன கழிவுகள் என்பதால் மிகவும் அபாயகரமானது. எனவே, அக்கழிவுகள், குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் பைகள், உணவுப்பொருட்கள் என பிரித்தெடுக்காமல் வெளியேற்றி வருகிறார்கள். மேலும், அக்கழிவுகளை தொழிற்சாலைகள் சாலையோரங்களில் கொட்டியும் மற்றும் கூவம், ஆற்றில் ஓரம் கொட்டியும் சுற்று சுழலை மாசுப்படுத்துகின்றனர். சில தொழிற்சாலைகள் தொழிற்பேட்டைகள், மற்றும் குடோன்களிலிருந்து வெளியேறும் திடக்கழிவுகள் மாதந்தோறும் கட்டண முறையில் வெளிநிறுவனங்களிடம் ஒப்படைக்கின்றனர். நகராட்சியில் சேகரம் ஆகும் குப்பைகள் Bulk Waste Generator – ஆக இருந்தாலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்காத கழிவுகளை நகராட்சிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. ஒரு சில ஒப்பந்ததாரர்கள் மட்டும் நகராட்சியில் அனுமதி பெற்று தன் சொந்த செலவில் அப்புறப்படுத்துக்கின்றனர். ஒரு சில தனியார் ஒப்பந்ததாரர்கள் அவர்களது வாகனங்களில் சொந்த பொறுப்பில் எடுத்துக்கொண்டு செல்ல வேண்டும். திடக்கழிவு வேலாண் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி ஓர் இடத்தில் அல்லது நிறுவனத்தில் அல்லது குடியிருப்புகளில் உருவாகும் மக்காத கழிவுகளினை நகராட்சிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் மற்றும் சாலையோரங்களில் கொட்ட கூடாது. குப்பைகளை மறுசுழற்சி செய்யும் இடங்களில் மட்டுமே கொட்டப்பட வேண்டும் நகராட்சிக்கு சேர வேண்டிய மக்காத குப்பைகளை எடுத்து செல்வதால், நகராட்சிக்கு குறிப்பிட்ட தொகையினை மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டும். இம்முறை பயன்படுத்துவதால் பின்வரும் நன்மைகள் நகராட்சிக்கு கிடைக்கப்பெறும்.

1. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் திடக்கழிவுகள், நகராட்சி எல்லைக்குள் கொட்டப்பட வாய்ப்பு இல்லை.
2. மக்காத கழிவுகள் முறைப்படி மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.
3. நகராட்சிக்கு வருமானமும் கிடைக்கிறது.
4. நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணியில் பணியாளர்கள், கூடுதல் கவனம் செலுத்த முடியும்.
5. மக்காத உலர்கழிவுகளை சேமித்து வைக்கும் இடத்தில் சேமித்து வைக்கப்படும், உலர்கழிவுகளின் அளவு அதிகமாகாமல் சேமித்து வைக்கும் அளவு குறைந்துவிடும்.

நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பாதிப்பு இல்லை. சுற்றுச்சுழல் பாதிக்கப்படாமல் இருக்க நகராட்சியில் எல்லைக்குட்பட்ட சிறு குறு தொழிற்சாலைகள் குடோன்கள், தொழிற்பேட்டைகளில் வெளிப்படும் மக்காத கழிவுகளை மட்டும் தனியே அப்புறப்படுத்த இரு வருட காலத்திற்கு தனியார் ஒப்பந்ததாரர்களை நியமித்து பணி செய்திட துப்புரவு ஆய்வாளர் 02.01.2021 தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, இரண்டு வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1394** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.13

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்று நோய் பரவாமல் தடுக்க பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தூய்மை பணியாளர்கள் பாதுகாப்புடன் இருக்கவும், கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் பாதுகாப்புடன் தூய்மை பணி ஆற்றிடவும் **முழு அளவு பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், நகராட்சி பகுதியில் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாகி வருவதால் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், 500 எண்ணிக்கையில் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தற்போது மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நடைமுறையில் உள்ளதால், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், நகராட்சி ஆணையர் அவர்களால் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15– ன் கீழ் கோரி பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மேலும், இதற்கான செலவினம் ரூ.1.75 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1395** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.14

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் அதிமாக பரவி வருவதால் போதிய அளவு **முழு அளவு பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு இல்லாததால் முழு அளவு பாதுகாப்பு கவச உடை (PPE) 500 எண்ணிக்கையில் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | கொள்ளளவு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | Sumathy Garments<br>No.3/6 1 st Floor, Poonguruthu amman complex, Thiruvalluvar salai, Ramapuram, Chennai–89. | இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் அதிமாக பரவி வருவதால் போதிய அளவு **முழு அளவு பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு இல்லாததால் 500 எண்ணிக்கையில் சப்ளை செய்யும் பணிக்கு | 1 Nos | ரூ.350/– |
| 2. | Sree Sai Traders,<br>No, 3/9, 2nd Street, Mahalakshmi Nagar, Karambakkam, porur, Chennai–116. | | 1 Nos | ரூ.385/– |
| 3. | Scorpion Sting<br>No.25, Kannadhasan nagar, 5th Street, Ramapuram, Chennai–89. | | 1 Nos | ரூ.400/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான Sumathy Garments நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்களின் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1396** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.15

திருவேற்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், இந்நகராட்சியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை பிரித்தெடுக்கப்பட்டு பசுமை உரங்கிடங்கில் உள்ள அரவை இயந்திரங்களில் மக்கும் குப்பைகள் இங்கு நுண் துகல்களாக அரைத்து அங்குள்ள தொட்டியில் உலரவைக்கப்பட்டு பின்னர் உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும், நகராட்சி பகுதியில் உற்பத்தியாகும் திடக்கழிவு உற்பத்தியாளர்களின் (அடுக்குமாடி குடியிருப்போர், திருமண மண்டபங்கள், கல்லூரிகள் உள்பட) ஒரு சிலர் மட்டும் ஈரக்கழிவுகளை உரமாக்கிடும் தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். மேலும், சிலர் மட்டும் தனியார் வாகனங்கள் மூலம் வெளியூர்களுக்கு எடுத்து செல்கின்றனர் மற்றும் சிலர் Bulk Waste Generator –கள் திடக்கழிவுகளை பிரித்தெடுத்து நகராட்சி வசம் ஒப்படைக்கின்றனர். உலர் கழிவுகளை தாங்களே தன் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்திக்கொள்ளவும், மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்படைத்து பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பரிசார்ந்த முறையில் ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பொன்னியம்மன் நகர் அல்லது காடுவெட்டி MCC யினை தனியார் நிறுவனத்திற்கு பொறுப்பாக்கி மேற்படி குப்பைகள் பெறப்படும் பகுதியிலிருந்து MCC உரம் தயாரிக்கவும், மேலும், கட்டிடத்தின் பராமரிப்பு பணி மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றை பொறுப்பேற்று கொள்ளவும், அந்நிறுவனம் தன் சொந்தப் பொறுப்பில் குப்பைகளை பெற்று உரம் தயாரிக்கவும் மற்றும் இதற்கான ஆகும் கட்டணத்தை BWG -களிடம் சம்மந்தப்பட்ட நிறுவனமே நிர்ணயம் செய்து கொள்ளவும், மேற்படி திட்டத்தினை இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்திட தனியார் நிறுவனங்களின் விருப்பங்களை கோரிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1397** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.16

இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து கழிப்பறைகளை சுகாதாரமாக பராமரிக்கப்பட தேவையான தளவாடப் பொருட்கள் சப்ளை செய்ய விலைப்புள்ளிகளில் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | தேவைப்படும் பொருட்கள் விவரம் | SVN Enterprises | G. Mathivelan | Arun Kumar Civil contractor & suppliers |
|---|---|---|---|---|
| 1. | முகம் பார்க்கும் கண்ணாடி | 172 | 174 | 180 |
| 2. | லைபாய் சோப் (பெரியது) | 37 | 39 | 42 |
| 3. | கால் மிதியடி | 320 | 326 | 330 |
| 4. | நாப்சின் பின் | 60 | 66 | 70 |
| 5. | வாளி | 172 | 174 | 178 |
| 6. | Hand Wash | 144 | 147 | 150 |
| 7. | டர்கி டவல் | 45 | 47 | 50 |
| 8. | டாயிலட் பிரஸ் | 68 | 70 | 75 |
| 9. | ஒடோநில் | 105 | 108 | 110 |
| 10. | பூந்தொட்டி | 365 | 367 | 370 |
| 11. | டிஜிட்டல் பேனர் GI பிராம் | 650 | 658 | 660 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | Flex Board GI பிராம் | 2750 | 2760 | 2765 |
| 13. | ரோடு பிரஸ் | **95** | 98 | 100 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான SVN Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்களின் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1398** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.17

இந்நகராட்சி பகுதியில் டெங்கு நோய் கொசுப்புழுக்களை கண்டறியவும் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் DBC பணியாளர்களுக்கு தேவைப்படும் **தளவாடப் பொருட்கள்** சப்ளை செய்ய விலைப்புள்ளிகளில் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | தேவைப்படும் பொருட்கள் விவரம் | J.J Enterprises | Thilagavathy Enterprises | V.J. Enterprises |
|---|---|---|---|---|
| 1. | டார்ச் லைட் | **260** | **280** | **300** |
| 2. | Replect Jacket | 240 | 280 | 270 |
| 3. | கரண்டி | **140** | 185 | 170 |
| 4. | stick | 220 | 235 | 240 |
| 5. | ID card | 140 | 165 | 160 |
| 6. | Jute Bag purse | 105 | 135 | 125 |
| 7. | plastic can | 15 | 42 | 30 |
| 8. | Dengue kit | 320 | 375 | 360 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான J.J Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்களின் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1399** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் திறந்தவெளி கழிப்பிடங்களை தடுப்பதற்காகவும், முற்றிலும் ஒழிப்பதற்காகவும் மற்றும் பொது மக்கள் நலன் கருதி பயன்பாட்டிற்காக நகராட்சி சார்பிர் 9 சமுதாய கழிப்பறைகள் மற்றும் 1 பொது கழிப்பிடங்களும் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இக்கழிப்பறைகளின் செயலாக்கம் பயன்பாடு **ODF** குறித்தான ஆய்வின்போது அலுவலர்களால் மிகவும் கவனிக்கப்பட்டு **Swatch Bharath Mission** –ன் ஒரு பகுதியாக **Swatch Survekshan** அதற்காக மதிப்பெண்களும் வழங்கப்படுகிறது. மேலும், துப்புரவு பணியாளர்கள் கொண்டு கழிப்பறைகள் சுத்தம் செய்யப்பட்டு வரப்படுகிறது. இதனால் தூய்மை பணிகளில் தொய்வு ஏற்பட வாய்ப்பாக அமையும் எனவே, நகராட்சியில் உள்ள 9 சமுதாய கழிப்பறைகள் மற்றும் 1 பொது

கழிப்பறையை தினசரி பேணி பராமரிக்க துப்புரவு ஆய்வாளரால் 08.02.2021 தேதிய குறிப்பில் மேற்படி கழிப்பறைகளை தனியார் வசம் ஒப்படைத்து பணிகள் மேற்கொள்ள கோரியுள்ளதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கான செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2283/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1400** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.19

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. மேலும், தினசரி 22 முதல் 25 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இதில் 11.14 மெட்ரிக்டன் மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் உருவாகிறது. மக்கும் கழிவுகளை பிரித்தெடுக்கப்பட்டு MCC– க்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மக்காத கழிவுகளினை மொத்தமாக கோலடி Plant–ல் சேகரம் செய்யப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், மறுசுழற்சிக்கு அனுப்பி வைக்கப்படும்போது Bailing செய்யாமல் வாகனங்களில் அனுப்புவதால் இடத்தை அடைத்துக் கொள்வதோடு மட்டுமில்லாமல், வாகனங்களில் ஒரு டிப்பர் லாரியில் 3 முதல் 4 மெட்ரிக்டன் மக்காத கழிவுகள் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகிறது. இதற்கு பதிலாக Bailing இயந்திரத்தை வாங்கி மக்காத கழிவுகளை Bailing செய்து அனுப்பி வைத்தால் 7 முதல் 10 மெட்ரிக்டன் மக்காத கழிவுகளை அனுப்பி வைக்க இயலும் என்பதை துப்புரவு ஆய்வாளரால் 08.02.2021 தேதிய குறிப்பில் Bailing இயந்திரத்தை வாங்கி வழங்கிட, பொன்னியம்மன் நகர் MCC–யில் நிறுவிட கோரியுள்ளதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கான செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2283/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1401** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.20

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 19.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பல்லவன் நகர் பூங்காவில் வண்ணம் பூசுதல், மின்விளக்குகள் சரிசெய்தல், பழுதடைந்த நடைபாதைகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்தல். | 9.90 | 1. M/s.கீதா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br><br>2. திரு.M.கார்த்திக் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.85 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1402** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண்.21

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கூவம் ஆற்றின் இருபுறமும் தடுப்பு வேலி அமைக்க ரூ.2070.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக பருத்திப்பட்டு பாலம் முதல் காடுவெட்டி தரைப்பாலம் வரை ரூ.340.00 இலட்சத்திலும், 2ம் கட்டமாக வேலப்பன்சாவடி முதல் வானகரம் (திருவேற்காடு எல்லை வரை) ரூ.365.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், மூன்றாம் கட்டமாக காடுவெட்டி முதல் வேலப்பன்சாவடி பாலம் வரையில் ரூ.900.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் 10.12.2020 அன்று உதவி பொறியாளர், பொதுப்பணித் துறை அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, பாரதி நகர் வலது கரையில் சுமார் 340 மீ, மாதிராவேடு கிராமம் வலது கரையில் சுமார் 200 மீ நீளமும் நெடுஞ்சாலையை விட தாழ்வான பகுதியாகும் மழைக்காலங்களில் இப்பகுதியில் அதிக அளவில் தண்ணீர் தேங்கி இருக்கும். இப்பகுதிகளில் மதிப்பீட்டில் உள்ளவாறு Grade Beam அமைத்து சுற்றுச்சுவர் அமைத்தால் அதிக அளவு மழைநீர் தேக்கதால் சுற்றுச்சுவர் இடிந்து விடும் என்பதால், அப்பகுதியில் Plinth Beam-க்கு மேல் சுற்றுச்சுவருக்கு பதில் மற்றொரு Additional Beam அமைக்க உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை, அவர்களின் கடித எண்.265/இ.பொ/அடையாறு பாசனப்பிரிவு/2020, நாள்.08.12.2020–ன்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 1500 மீ நீளத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெற்ற சுற்றுசுவருக்கு பதில் Double Grade Beam அமைக்கவும், மேலும் அவ்வாறு Additional Beam அமைக்கும் போது நடுவில் இருக்கும் இடைவெளியில் வெளி நபர்கள் குப்பை கொட்டவும், சுகாதார கேடு ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளதால் மதிப்பீட்டில் உள்ள சுற்றுசுவருக்கு பதில் Grill அமைக்க, தோராய செலவினம் ரூ.27.00 இலட்சம் ஆகும். இதனை இம்மதிப்பீட்டுக்குள் பணியினை முடிக்கவும் அதற்கான உரிய அனுமதி வேண்டி கருத்துருவினை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–28 அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–28 அவர்களுக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கு ஒதுக்கீடு தொகையினை விட கூடுதலாகும் செலவினத்தினை திட்ட மதிப்பீட்டிலேயே ஈடு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1403** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ (ம) இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.22

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் அயனம்பாக்கம் கிராமம், மெட்ரோ சிட்டி சர்வே எண்.198/PT பகுதி மற்றும் வார்டு எண்.11ல் நூம்பல் கிராமம், மாதிராவேடு கோ–ஆப்ரேடிவ் நகர் பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதியதாக பூங்காவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட பூங்காவில் தேவையான தெருவிளக்கு, குடிநீர் மற்றும் அடிப்படை வசதி பணிகளுக்கு தேவையான புதியதாக மும்முனை மின் இணைப்பு (3 Phase Line) பெறவேண்டி உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னியம்மன் நகர் மற்றும் வேலப்பன்சாவடி சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்பித்து அதற்கான நடவடிக்கை மேற்கொண்டு கேட்பு கட்டணம் செலுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி மின்இணைப்புக்கான மின்வாரியத்தின் மூலம் தெரிவிக்கப்படும் கேட்பு கட்டண தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1404 நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ (ம) இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.23

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 145.00 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் தெருக்குழாய்களின் வழியே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் தற்போது நகராட்சியின் மூலம் அனேக இடங்களில் நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெறும் போது சாலைகளின் குறுக்கே சிறுபாலங்கள் அமைத்தல் மற்றும் சாலையோரம் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளால் குடிநீர் குழாய்கள் பழுதடையும் சுழல் உள்ளது. எனவே, அவ்வப்போது பழுதுகளின் குடிநீர்குழாய்கள் மற்றும் பொதுக்குழாய்களை ஒரு வருட காலத்திற்கு உடனுக்குடன் பழுதுபார்க்கவும் அதற்காக ஆகும் செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1405 நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.24

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 145 ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு ஆழ்துளை குழாய் கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து ஒரு வருட காலத்திற்கு பழுது நீக்கி பராமரித்து சீராக குடிநீர் விநியோகம் செய்திடவும், அதற்காக ஆகும் செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1406 நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.25

இந்நகராட்சியில் குடிநீர் திட்டம் ஏதுமில்லாத காரணத்தினால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள சில இடங்களில் குடிநீர் தரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் கோலடி ஏரி பகுதியின் அருகே அமைக்கப்பட்டுள்ளஆழ்துளை குழாய் கிணற்றிலிருந்து நகராட்சிக்கு சொந்தமான 4 குடிநீர் லாரிகள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடைக்காலங்களில் குடிநீர் தட்டுப்பாட்டு அதிகரிக்கும் நிலையிலும், அவ்வப்போது நகராட்சி குடிநீர் லாரிகளின் வருடாந்திர தகுதிகாண் சான்று பெறும் காலங்களில் வாகனங்களை பழுது பார்க்கும்

காலங்களில் வாகனங்களை இயக்க முடியாத நிலையுள்ளது. எனவே, எதிர்வரும் கோடைக்காலத்தில் குடிநீர் ஆதாரம் நல்ல நிலையில் இல்லாத பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தடையின்றி தனியார் லாரிகளை வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) எதிர்வரும் கோடை காலத்தில் குடிநீர் தட்டுபாடு நிலவுவதை தடுக்க மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1407** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.26

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சிறப்பு சாலை திட்டம் 2020–21–ன் கீழ் தார்சாலை, பேவர் பிளாக் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் M/s.Bright Advertising, No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006. என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Bright Advertising, No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006 | சிறப்பு சாலை திட்டம் 2020–21–ன் கீழ் தார்சாலை, பேவர் பிளாக் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு | 9685/20-21<br>28-12-2020 | 91,822.00 |
| | | | மொத்தம் | **91,822.00** |

**அலுவலக குறிப்பு :–**

1.அனுமதி அளிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும் மற்றும் பணிக்கான தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1408** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.27

இந்நகராட்சி புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு என பல்வேறு பிரிவுகள் இயங்கி வருகிறது. மேற்படி பிரிவுகளில் பயன்படுத்தப்படும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும், அவற்றை கணினியில் பதிவேற்றம் செய்துக்கொள்ள அதற்கு தேவையான மர மேஜைகள் மற்றும் அலமாரிகள் போன்ற அமைத்திட அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1409** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.28

இந்நகராட்சி புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பதிவறை காப்பாக அறை உள்ளது. மேற்படி அறைகளில் பயன்படுத்தப்படும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால், அதற்கு தேவையான அலமாரிகள் அமைத்துக்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1410** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.29

இந்நகராட்சி புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் வரிவசூல் மைய கட்டிடம் உள்ளது. அக்கட்டிடத்தின் பொதுமக்கள் பாதுகாப்பாக நின்று வரிவசூல் செலுத்திட எதுவாக நிழற்குடை வசதி செய்யும் பணி மேற்கொள்ளவும், மேலும், அலுவலக கட்டிடம் முன் அமைக்கப்பட்ட தூண்களுக்கு அலங்கார வசதிகள் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1411** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.30

இந்நகராட்சி புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் உள்ள படிக்கட்டுகள், கார்டன் பகுதிகளில் SS வகை கை பிடிகள் பொதுமக்களின் பாதுகாப்பு அவசியம் அமைத்துக்கொள்ளவும், மேலும், நகராட்சி அலுவலகத்தில் மின்சார வேலைகள் செய்திடம் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1412** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.31

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்டவாறு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதி பணிகளை மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலைப்பணிகள் மேற்கொள்ள அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 8 | நூம்பல் சித்திரை 1வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் | 9.30 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| | | மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | |
| 2. | 8 | நூம்பல் சித்திரை 2வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 9.30 |
| 3. | 8 | நூம்பல் தெருவீதியம்மன் கோயில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 9.40 |
| 4. | 8 | நூம்பல் தெருவீதியம்மன் கோயில் குறுக்கு தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 5.00 |
| 5. | 4 | ஐஸ்வர்யா நகர் 2வது மற்றும் 4வது குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 9.50 |
| 6. | 9 | கிருஷ்ணா நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல். | 9.90 |
| 7. | 9 | கிருஷ்ணா நகர் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 9.90 |
| 8. | 9 | பாலாஜி நகர் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 9.90 |
| 9. | – | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எல்லையினை நிர்ணயம் செய்ய நகராட்சி வாசகம் பொருந்திய ஒளிரும் எல்லைப்பலகைகள் அமைத்தல். | 7.00 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1413** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.32</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்டவாறு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதி பணிகளை குடிநீர், கட்டடம் மற்றும் சாலைப்பணிகள் மேற்கொள்ள அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 7,8 (ம) 16 | ஆவடி பிரதான சாலைக்கு புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளுதல், கவரை தெருவிற்கு ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் கைபம்பு அமைத்தல் மற்றும் ஐ.சி.எல் காலனிக்கு பைப் லைன் விரிவாக்கம் செய்தல். | 7.00 |
| 2. | 5 | மெட்ரோ சிட்டி பூங்காவில் யோகா மண்டபம் அமைத்தல். | 7.50 |
| 3. | – | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலைகளை தற்காலிமாக செப்பனிடுதல். | 9.00 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1414** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.33</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்டவாறு முக்கிய சாலைகளில் தெருமின் விளக்குகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2 (ம) 3 | நியூ சென்னை சிட்டி மற்றும் இந்திர காந்தி தெருவிற்கு பகுதியில் 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.30 |
| 2. | 17 | சுந்தரசோழபுரம் ஏரிக்கரை தெருவிற்கு 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.30 |
| 3. | 1 | தினேஷ் நகர் பகுதிக்கு 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.80 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1415** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.34</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்டவாறு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதி பணிகளான மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலைப்பணிகள் மேற்கொள்ள அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 5 | எஸ் (அன்)பி குடியிருப்பு பிரதான சாலைக்கு பேவர் பிளாக் வசதி செய்தல். | 33.00 |
| 2. | 4 | யாகவ மங்கள் ராஜ் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 20.00 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1416** **நாள்.29.01.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

ஒம்/– தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

/உண்மை நகல்/
ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.